1990 மார்ச் 29]

கேள்வி நேரத்திற்குப்பின் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பது குறித்து.

திரு. குமரி அனந்தன் : On a Point of Order. வினா நேரம் முடிந்தவுடனே அல்லவா, கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்து இருக்க வேண்டும். நமது மரபு வழியின்படி கவன ஈர்ப்பு முன்னிடத்தைப் பெற்று இருக்க வேண்டாமா? சபாநாயகர் அவர்களே, அது இருக்கிறதா? இல்லையா? எங்களுக்கு வந்ததிலே இருக்கிறது. இன்று கவன ஈர்ப்பு நமது அட்டவணையிலே இருக்கிறது அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பின்னாலேதான் வரும். வினா நேரம் முடிந்தவுடன், ஒத்திவைப்புத் தீர்மானம். ஐயா அவர்கள் மீண்டும் விதிகளைப் படிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவையை ஒத்தி வைப்பது என்றால், எல்லா நடவடிக்கைகளையும் ஒத்தி வைப்பதற்காகத் தான். கவன ஈர்ப்பு உள்பட எல்லாவற்றையுதி ஒத்திவைக்க வேண்டும் என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிற அலுவல்களையும் ஒத்திவைக்க வேண்டும் என்பதுதான். அந்த அலுவல்களிலே கவன ஈர்ப்பும் ஒன்று. ஒருவேளை பதிப்பு மாறியிருக்கும்.

திரு. குமரி அனந்தன் : Calling Attention to matters of urgent public importance. "Such notice shall be taken up after the questions and before the list of business is entered upon" என்று இருக்கிறது, அதைத்தான் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவிற்கு அடுத்தும், ஏற்கெனவே பட்டியலில் குறிப்பிட்ட அலுவல்களுக்கும் இடையிலேயும் என்று பொருள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவையினுடைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்பது தான் ஒத்திவைப்புத் தீர்மானம், எல்லா அலுவல்களையும் ஒத்தி வைத்து விட்டு, இந்தப் பிரச்சினையைப் பற்றி மாத்திரம் பேச வேண்டும் என்று. தவறிப் போய், அல்லது ஒருவேளை அவரே நல்ல முடிவு என்று கருதி, நம்முடைய சபாநாயகர் அவர்கள் ஒத்திவைத்து விவாதிக்கப்படுகிறது என்று சொல்லி விடுவார்களேயானால், வேறு அலுவல்களே இன்றைக்கு நடக்க முடியாது ஒரு மணி வரையிலே. அவர்கள் அப்படிச் சொல்வதில்லை. அதனால் அலுவல்கள் நடைபெறுகின்றன. எனவே, அந்த அலுவல்களிலே ஒன்றுதான் கவன ஈர்ப்புத் தீர்மானமும். எனவேதான் ஒத்திவைப்புத் தீர்மானம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மார்ச் 29

முதலில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவையை ஒத்திவைத்து விட்டு பேசப் போகிறோமா, அல்லது ஒத்தி வைக்காமல் மற்ற பிரச்சினைகளை எல்லாம் எடுத்துக்கொள்ளப் போகிறோமா என்ற கேள்விக்கு விடை அளிக்கவேண்டிய கட்டத்திலேதான் முதலிலே ஒத்திவைப்புத் தீர்மானம், அதற்குப் பிறகு, அலுவல்களிலே ஒன்றான கவன ஈர்ப்புத் தீர்மானம்.

11-30 மணி

திரு. குமரி அனந்தன் : மன்னிக்க வேண்டும். நான் எதிர்த்துப் பேசவில்லை. ஆனாலும், உங்களுடைய கவனத்திலே இது இருந்து இன்னும் அது பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இல்லையென்றால், விதிமுறையில் இருக்கின்ற வாசகங்களை பாருங்கள் "such notices shall be taken up after the questions and before the list of business" என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத் தமிழிலே, படித்தால், எல்லோருக்குமே விளங்குமே !

திரு. குமரி அனந்தன் : அதைத் தமிழ்ப்படுத்தியும் நாம் சொல்ல முடியும் என்ற காரணத்திற்காகச் சொல்கிறேன். '' மற்ற அலுவல்களுக்கு முன்னாலும், வினாவிற்குப் பின்னாலும்'' என்று வருகின்ற காரணத்தினாலே நீங்கள் இன்னும் இதனைச் சற்று பரிசீலிக்க வேண்டும் அல்லது விதிமுறையில் இருக்கின்ற வாசகங்களினாலே நாம் திசை திருப்பப்படுகிறோமா, அல்லது முதல்வர் அவர்களுடைய விளக்கமே போதுமானதா என்பதனை, எதுவாக இருந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்—விதியில் இருக்கிற காரணத்தினாலே சுட்டிக் காட்டுகிறேன். கவன ஈர்ப்பு எடுக்கப்பட்டு இருக்கவேண்டுமோ என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு முன்னாலேயே இது தெளிவுபடுத்தப்பட்டு நீண்ட காலமாக அந்த மரபு தான் பின்பற்றப்பட்டு வருகிறது. உங்களுக்குத் தந்திருக்கிற பட்டியலிலேயே வரிசையாக, 'வினாக்கள்—விடைகள்', அதற்குப் பிறகு இரண்டாவதாக, '111-வது விதியின் கீழ் அறிக்கை', மூன்றாவதாக, 'கவன ஈர்ப்பு' என்று வருகிறது. எனவே, அந்த அடிப்படையில் 'வினாக்கள்—விடைகள்' முடிந்தவுடனேயே, "Zero hour" என்று சொல்லப்படுகிற சில "Mentions" அதற்குப் பிறகு ஒத்திவைப்புத் தீர்மானம். இவை இரண்டும் இடையில் செருகப்படுபவை. அதற்குப் பிறகுதான் பிற அலுவல்கள். இதுதான் தீர்ப்பு.